வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3865/ஆ4/2023 நாள்.23.11.2023

பொருள் தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – 2023–2024ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகள் – மாணவர்களுக்கு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் வழங்குதல் அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகள் – தெரிவித்தல் – சார்பு

பார்வை 1. அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.018867/F1/2023 நாள் 23.11.2023

2. அரசாணை (2டி)எண்.50பள்ளிக்கல்வி (ஜி/இ1) துறை. நாள்.09.08.2017

3. அரசாணை (2டி)எண்.50பள்ளிக்கல்வி (ஜி/இ1) துறை. நாள்.20.02.2018

==========

பார்வை 1–ல் காணும் அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி 2023–2024 ஆம் கல்வியாண்டில் மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பயிலும் மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடத்திற்கும் அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை கணக்கிட்டு வழங்கும் முறை இணைக்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் தலைமையாசிரியர்கள், பள்ளியில் உள்ள அனைத்து மேல்நிலைப் பாட ஆசிரியர்களுக்கும் அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்கள் வழங்குதல் தொடர்பான அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகளின் நகலினை வழங்கி, ஆசிரியர்களின் கையொப்பத்தினை பெறப்பட வேண்டும். ஆசிரியர்கள் அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் வழங்குதைற்கான நெறிமுறைகளைப் பின்பற்றி பள்ளியில் +1 மற்றும் +2 பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் தெரிவிக்கவேண்டும்.

மேல்நிலைப்பள்ளிகளில் மாணவர்களுக்கு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்கள் வழங்கும் முறை. நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு சரியாக பின்பற்றி எவ்வித புகாருக்கு இடமளிக்காமல் செயல்படுமாறு அனைத்து அரசு, நிதியுதவி மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:

1. அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகள்

23/11/23

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
அனைத்து அரசு, நிதியுதவி மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்கள். வே.மா.

நகல்:

1. மாவட்டக் கல்வி அலுவலருக்கு(இடைநிலை/ தனியார்)தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலருக்கு(தொடக்கக்கல்வி)தகவலின் பொருட்டு அனுப்பலாகிறது.